## சிறப்புக்குறிப்பு 7
## வளர்ச்சிக்கு வசதியளிப்பவைகளாக அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மீள உபாயப்படுத்தல்

மிக நீண்ட காலமாக, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள்[1] நாடுகளின் சமூக பொருளாதார அபிவிருத்திகளில் முக்கிய வகிபாகமொன்றினை ஆற்றி வருகின்றன. சிங்கப்பூர், யப்பான், சீனா மற்றும் கொரியா போன்ற ஆசியாவிலுள்ள இணை நாடுகள் உட்பட பல நாடுகளில் கூட அரசிற்குச் சொந்தமான ஆரோக்கியமான தொழில்முயற்சிகள் தொழில்நிலை உருவாக்கம், வறுமையொழிப்பு, இறை உறுதிப்பாடு, துறையின் அல்லது புவியியல்சார் பிரதேசங்களின் அபிவிருத்தி, சூழல் பாதுகாப்பு, என்பனவற்றிற்கு சார்ந்த ஒழுங்குமுறைப்படுத்தலுக்கு பாரிய பங்களிப்பு செய்துள்ளன.

அண்மிய தசாப்த காலப்பகுதியில் காணப்பட்டதுபோல் தனியார்மயமாக்கல் மற்றும் ஒழுங்குவிதிகளைத் தளர்த்தல் தொடர்பில் சாதகமான இணக்கப்பாடுகள் அதிகரித்து வருகின்ற போதும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வகிபாகம், குறிப்பாக, அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் குறையவில்லை. இதற்கு முக்கியமான காரணம் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி மற்றும் குடித்தொகையினரின் ஒட்டுமொத்த நலனோம்புகை என்பன மீது உயர்ந்த தாக்கத்தினைக் கொண்டுள்ள இன்றியமையாத உட்கட்டமைப்பு மற்றும் பொதுமக்களுக்கான பணிகளைத் தொடர்ந்தும் வழங்குகின்றவைகளாக இருப்பதேயாகும். எனினும், அபிவிருத்தியடைந்துவரும் உலகில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் குறைந்த உற்பத்தித்திறனால் பாதிக்கப்படுவதுடன் இவை போட்டித்தன்மையினை உருகுலச்செய்வதுடன் சரிவரக் கொண்டிராததுடன் ஊழல் தன்மையினால் பாதிக்கப்பட்டும் வருகின்றன. இதன் விளைவாக இவை வரவுசெலவுத் திட்டத்தின் மீதும் அரசாங்கத்தின் மீதும் குறிப்பிடத்தக்களவு சுமையினைத் தோற்றுவித்து வருவதுடன் சில விடயங்களைப் பொறுத்தவரை இறை மற்றும் பொருளாதார நெருக்கடிகளுக்கும் இட்டுச் செல்கின்றன. இப்பின்னணியில், இலங்கை அதன் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றம் தொடர்பில் தொடர்ந்தும் விழிப்புடன் இருப்பது அவசியமானதாகும்.

### இலங்கையில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பரிணாம வளர்ச்சி

இலங்கையில் அரச துறை தொழில்முயற்சிகளின் அபிவிருத்தியின் தொடக்கம் இரண்டாம் உலகப் போர் காலப்பகுதியான 1939 - 1945 இற்கு முன்னர் இருந்தே ஆரம்பமாகின்றது. இந்த போர்க் காலப்பகுதியில் நிரம்பல் கட்டுப்படுத்தப்பட்டிருந்த இன்றியமையாத பொருட்களை வழங்குவதற்காக அரசிற்குச் சொந்தமான பல தொழில்முயற்சிகள் நிறுவப்பட்டன. 1950 களின் நடுப்பகுதியில் சோவியத் ஒன்றியத்தில் சோசலிசம் வெற்றிபெற்றமையின் காரணமாக, இதே காலப்பகுதியில் சோசலிச மாதிரிகளை இந்தியாவிலும் பின்பற்றுவதற்கான முயற்சிகள் காணப்பட்டதனால் சோசலிசம் மீதான ஆர்வம் அதிகரித்தது. இதற்கமைய, அக்காலப்பகுதியில் இருந்த அரசாங்கம் நாட்டின் அபிவிருத்திக்கு மத்திய திட்டமிடல் அவசியமானது எனக் கருதியது.

இக்காலப்பகுதியில், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் அபிவிருத்திச் செயன்முறையின் ஊக்கியாக இரண்டு முக்கிய சட்டவாக்கங்கள் காணப்பட்டன. அதாவது முறையே 1955ஆம் ஆண்டின் 19ஆம் இலக்க அரச உபசரணை கூட்டுத்தாபனங்கள் சட்டம் மற்றையது 1957ஆம் ஆண்டின் 49ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபனங்கள் சட்டம். முன்னையது ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டுவரும் கைத்தொழில்களைக் கூட்டிணைக்க முயற்சித்த வேளையில், பின்னையது எந்தவொரு கைத்தொழில் நடவடிக்கையினையும் ஏற்படுத்தவும் கொண்டு நடத்தவும் அரசாங்கத்திற்கு வலுவளித்தது. 1957ற்குள் சிமெந்து, காகிதம், மட்பாண்டம், தோல் மற்றும் காலணி என்பனவற்றை உள்ளடக்கிய பல முக்கியமான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொழிற்பாடுகளைத் தொடங்கின. இக்காலப்பகுதியில் இடம்பெற்ற இன்னொரு அபிவிருத்தி யாதெனில் 1958இல் இலங்கை போக்குவரத்துச் சபை உருவாவதற்கு வழியமைத்த பேருந்துக் கம்பனிகள் தேசியமயமாக்கப்பட்டமையாகும்.

1959இல் பத்தாண்டு திட்டமொன்று அறிமுகப்படுத்தப்பட்டது. இது இறக்குமதி பதிலீட்டுக் கைத்தொழில் மயமாக்கலை வலியுறுத்தியது. இத்திட்டம் முழுமையாக தொழிற்படுத்தப்படாத போதும் அடுத்து வந்த ஆண்டுகளின் பொருளாதாரக் கொள்கைகளை பாரியளவில் வழிநடத்தியது.இதற்கமைய, சிமெந்து, உருக்கு, காகிதம், டயர், கனிப்பொருள் மணல், உப்பு, மாவாலை, ஒட்டுப்பலகை, பெற்றோலிய சுத்திகரிப்பு மற்றும் வளமாக்கி போன்ற “அடிப்படைக் கைத்தொழில்களை” அரசாங்கம் மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனினும், அரசாங்கத்தின் ஈடுபாட்டிற்குரிய காலணி, மட்பாண்டம், புடவைகள் மற்றும் தோல் உற்பத்திகள் போன்ற சில துறைகள் தனியார் தொழில்முயற்சிகளின் பங்கேற்பிற்காகவும் அனுமதிக்கப்பட்டன. இவ்வுள்முகம் நோக்கிய அபிவிருத்தி உபாயம் சென்மதி நிலுவையில் காணப்பட்ட விடாப்பிடியான பற்றாக்குறையினால் தேவைப்படுத்தப்பட்டதுடன் 1960 இலிருந்து கடுமையான இறக்குமதி கட்டுப்பாடுகளைத் தொடர்ச்சியாக அறிமுகப்படுத்தும் நிலையினைத் தோற்றுவித்தது.

புதிய தொழில்முயற்சிகளை நிறுவுதல் மற்றும் தொடர்ச்சியான தேசிய மயமாக்கல் மற்றும் தனியார் முயற்சிகளின் கையகப்படுத்துகை இரண்டினூடாகவும் அரச துறையில் பல

1 அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சி என்பதற்கு பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட வரைவிலக்கம் எதுவும் கிடையாது. (ஐரோப்பிய ஆணைக்குழு, 2013, ப.நா.நிதியம் 2014, ஐரோப்பிய பொருளாதார ஆணைக்குழு, 2015). எனினும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சில பண்புகள் வருமாறு (1) அதன் சொந்த, தனியான சட்ட ஆளுமைத் தன்மையினைக் கொண்ட நிறுவனம் (2) அரச பிரிவினால் குறைந்தபட்சம் பகுதியளவில் கட்டுப்படுத்தப்படும் நிறுவனம் மற்றும் (3) வர்த்தக ரீதியாக அல்லது பொருளாதார நடவடிக்கைகளில் முனைப்பாக ஈடுபட்டுள்ள நிறுவனம் (ப.நா.நிதியம் 2020) அரச நிதியியல் புள்ளிவிபரவியல் கைநூல் 2014 (ப.நா.நிதியம் 2014) ஏதேனும் நியாயப்படுத்தல்களில் ஈடுபட்டுள்ள நிறுவனத்தின் அரச கட்டுப்பாடுகளை மதிப்பிடுவது எனக் குறிப்பிடுகிறது. இதற்கமைய, அரசாங்கம் சிறியளவு எண்ணிக்கையான பங்குகளை மாத்திரம் சொந்தமாகக் கொண்டுள்ள வேளையிலும்கூட கம்பனித் தீர்மானங்கள் தொடர்பில் குறிப்பிடத்தக்க செல்வாக்கினை அரசு புரியக்கூடும்.

தனியுரிமைகள் ஏற்படுத்தப்பட்டமை உட்பட தன்நிறைவினை நோக்கிய புதிய வழிமுறைகள் 1970களில் உருவாக்கப்பட்டன. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் உருவாக்கம் என்பது நலம் பயக்கிறதாக இருக்குமென எதிர்பார்க்கப்பட்டது ஏனெனில், இவை இயல்பான தனியுரிமைகளாக இருப்பதனால் தனியார் துறை தொழிற்பாட்டாளர்களினால் வழங்கக்கூடியதிலும் பார்க்கக் குறைவான விலையில் சேவைகளையும் உற்பத்திகளையும் வழங்குவார்கள் என்றும் இவை முழுச் சந்தையின் கேள்வியையும் பூர்த்திசெய்யக்கூடியனவாகவும், சில வேளை ஏற்றுமதி உள்ளாற்றல் கொண்டவையாகவும் இருப்பார்கள் என்பதனாலாகும். இதற்கமைய, அடுத்துவந்த ஆண்டுகளில் துறைமுகப் பணிகள், பயணிகள் போக்குவரத்து, பெருந்தோட்டம் போன்ற இன்னும் பல துறைகளில் ஈடுபட்டிருந்த தனியாருக்குச் சொந்தமான நிறுவனங்கள் தேசியமயமாக்கப்பட்டன. 1970களின் நடுப்பகுதியில், வங்கித்தொழில், பெருந்தோட்டங்கள், பாரியளவு கைத்தொழில்கள், போக்குவரத்து, காப்புறுதி, தொலைத்தொடர்பூட்டல், அஞ்சல் பணிகள், துறைமுகங்கள், மின்வலு, பெற்றோலியத்தின் இறக்குமதி மற்றும் விநியோகம், வீதிகள், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற முக்கிய பொருளாதாரச் சமூக நடவடிக்கைகள் ஒன்றில் அரச துறை தனியுரிமைகளாக அல்லது அரச தொழில்முயற்சிகளினால் பெருமளவிற்குப் பொறுப்பேற்கப்பட்டனவாக இருந்தன. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை 1962இன் 14 இலிருந்து 1980களின் நடுப்பகுதியில் 280 இற்கு மேற்பட்ட தொழில்முயற்சிகளுக்கு அதிகரித்தன.

1980களின் நடுப்பகுதியில், அரச தொழில்முயற்சிகள் பல்வேறுபட்ட பிரச்சனைகளை எதிர்நோக்கியமை ஏற்றுக்கொள்ளப்பட்டதொரு விடயமாக இருந்தது. இவை மோசமான நிதியியல் செயலாற்றத்திற்குக் காரணமாயமைந்த வினைத்திறனற்ற தொழிற்பாடு, உற்பத்திகள் மற்றும் சேவைகளின் மோசமான தரம் மற்றும் நிரம்பல் பற்றாக்குறை, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் உண்மையான தேவைப்பாடுகளிலும் பார்க்க அரசியல் காரணங்களினால் தூண்டப்பட்ட ஆட்சேர்ப்புக்கள், பாரிய முதலீட்டுத் தேவைப்பாடுகளைப் பூர்த்திசெய்யும் விதத்தில் மூலவளங்களைத் திரட்ட முடியாத தன்மை மற்றும் அரச செலவுத்திட்டத்தின் மீது மிகையாகத் தங்கியிருக்கும் நிலை என்பனவற்றை உள்ளடக்கிக் காணப்பட்டன. வரவுசெலவுத் திட்டத்தின் மீது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வளர்ந்துவரும் சுமையுடன் பேரண்டப்பொருளாதார உறுதிப்படுத்தலுக்கான அவசரத் தேவைப்பாட்டினை பல்புடை கொடையாளி முகவர்கள் எடுத்துக்காட்டியது என்பது 1988இல் அரச கொள்கையொன்றாக தனியார் மயப்படுத்தலை அரசாங்கம் அறிவிப்பதனை விளைவித்தது. 1989இல் தொடங்கி 1993 வரையிலான காலப்பகுதியில் 43 வர்த்தக தொழில்முயற்சிகளின் பகுதியளவிலான அல்லது முழுமையான உரிமை நீக்க நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டது. எனினும், இவ்வுரித்து நீக்க நிகழ்ச்சித்திட்டம் அதன் பின்னரான காலப்பகுதியில் பெருமளவு விமர்சனங்களுக்குள்ளானது. தனியார்மயப்படுத்தல் தொடர்பான இலங்கையின் அனுபவங்களைப் பார்க்கின்றபோது பொருளாதாரமும் ஆளுகை நிறுவனங்களும் எந்தளவிற்கு நலிவாகக் காணப்படுகின்றனவோ, அந்தளவிற்கு தனியார்மயப்படுத்தலின் நன்மைகளைப் பெற்றுக்கொள்வதற்கு கடினமாகயிருக்கும்.

**இலங்கையில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் தற்போதைய நிலை**

கடந்த மூன்று சதாப்த காலத்தில், தொடர்ந்து வந்த அரசாங்கங்கள் தனியார் மயப்படுத்தலுக்கும் தேசிய மயமாக்கலுக்குமிடையிலான முயற்சிகளுக்கிடையில் மாறிவந்தன. தற்போது நானூறுக்கும் மேற்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், வலு, சக்தி, நிதி மற்றும் காப்புறுதி, நீர், விமானப் போக்குவரத்து, சுகாதாரம் மற்றும் கல்வி அத்துடன் இன்னும் பல விடயங்கள் உள்ளிட்ட முக்கியமான துறைகளில் செயற்படுகின்றன. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் பெரும்பாலானவை 1971ஆம் ஆண்டின் 38ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் "நிருவகிப்பவர் பகுதி II" இன் மூலம் ஒழுங்குமுறைப்படுத்தப்பட்டதுடன் அண்மைக் காலத்தில் பல நிறுவனங்கள் 2007ஆம் ஆண்டின் 07ஆம் இலக்கக் கம்பனிகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ளன. இவற்றின் பொருளாதாரத்தின் தொழிற்பாடுகள் மற்றும் உருமாற்றத்திற்கு உபாயகர ரீதியல் முக்கியமானவை எனக் கருதப்படுவதனால் 52 அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள், அரசிற்குச் சொந்தமான வர்த்தக தொழில்முயற்சிகள் என (SOBEs) இனங்காணப்பட்டுள்ளன. ஏனையவையுடன், இலங்கை வங்கி, மக்கள் வங்கி, இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை துறைமுக அதிகாரசபை, சிறிலங்கன் எயர்லைன்ஸ், இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தேசிய மருந்தாக்கற் கூட்டுத்தாபனம், என்பவை இலங்கையில் அரசிற்குச் சொந்தமான வர்த்தக தொழில்முயற்சிகள் என்பவற்றிற்குள் உள்ளடங்கும்.

பொருளாதாரத்திலுள்ள உபாயம் மிக்க துறைகளில் இவை முக்கியமான வகிபாகத்தினைக் கொண்டுள்ளபோதும், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மோசமான நிதியியல் செயலாற்றம் பாரிய இறைச் சுமையினைக் கொண்டனவாக மாறியுள்ளன. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அவற்றின் இழப்புக்களை நிதியிடுவதற்கு அளவுக்கதிகமாக வங்கித்தொழில் முறையில் தங்கியிருப்பது செயற்றிறனான முதலீடுகளை இல்லாமல் செய்வது மட்டுமன்றி அவற்றின் பலயீனமான நிதியியல் செயலாற்றத்தின் காரணமாக நிதியியல் முறைமையின் மீது ஏய்துநிலையை ஏற்படுத்தியுள்ளது. அவற்றின் நிதியியல் இழப்புக்கள் அதிகரித்துச் செல்வது இன்றியமையாத பொருட்களுக்கும் பணிகளுக்குமான உள்நாட்டுக் கேள்வியை சுமுகமாகப் பூர்த்திசெய்வதற்கான அவற்றின் இயலாற்றலைக் குறைத்துவிடுவதனால் பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடும் அச்சுறுத்தலுக்குள்ளாகிறது. இந்த விடயத்தினை அங்கீகரித்து, அண்மைய ஆண்டுகளில், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளைச் சீரமைப்பதற்கு அரசாங்கம் பல்வேறு முன்னெடுப்புக்களை மேற்கொண்டது. இது தொடர்பிலான முக்கிய

சீர்த்திருத்தங்களாகத் தொடர்பான தொழில்முயற்சி, தொடர்பான அமைச்சு மற்றும் நிதி அமைச்சு என்பனவற்றினால் முக்கூட்டு புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றாகக் கூட்டாண்மை எண்ணக்கூற்றின் அறிமுகமென்பதுடன் வர்த்தக ரீதியான சுதந்திரத்தினை வழங்குவதுடன அவற்றின் பொறுப்புக்கூறும் மட்டத்தினை அதிகரிக்கும் ஒழுங்குமுறைக் கட்டமைப்பின் அறிமுகமாகும். ஒரேவிதமான குறிக்கோள்களையும் ஒரேவிதமான பெறுமதிச் சங்கிலி மட்டத்தினையும் கொண்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை "பொருளாதார அளவுச் சிக்கனத்தினை" அடையும் விதத்தில் அம்முயற்சிகளை ஒருங்கிணைத்தல் அல்லது இணைத்தல் தொடர்பான கொள்கைச் சீர்திருத்தங்களும் இனம் காணப்பட்டுள்ளன. மேலும், அரசாங்கம் சிங்கப்பூர் மற்றும் மலேசியாவில் காணப்படுவது போன்று 'உடமைக் கம்பனி' மாதிரிகளில் காணப்பட்ட வெற்றியினைக் கருத்திற்கொண்டு உயர் பெறுமதி கொண்ட உண்மைச் சொத்துக்களினை ஒன்றிணைப்பதற்கும் முகாமைத்துவம் செய்வதற்கும் முழுமையாக அரசிற்குச் சொந்தமான செலன்டிவா இன்வெஸ்ட்மன்ட் லிமிடெட் இனை அரசாங்கம் அண்மையில் உருவாக்கியது.

கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றிற்குப் பின்னைய பொருளாதாரத்தின் மீட்சிச் செய்முறைகளின் போது, பொருளாதாரத்தினை மிக அவசரமான முறையில் சீர்செய்ய வேண்டிய தேவை காணப்படுகின்றது. அத்தகைய சீர்திருத்தங்களை விரைவுபடுத்த வேண்டிய கடுமையானதொரு நிலைமை தோன்றியதுடன் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை வளர்ச்சிக்கு வசதியளிப்பவைகளாக உத்வேகமும் விரைவானதுமான முறையில் மாற்றியமைப்பதன் மீது கவனம் செலுத்தப்படவேண்டியுள்ளது. அவற்றின் வினைத்திறன், உற்பத்தியாக்கம் மற்றும் இலாபத்தன்மை என்பனவற்றை மேம்படுத்துவதும் இதன் மூலம் பொருளாதார மீட்சிச் செய்முறைக்கு அவை காத்திரமான விதத்திலும் நீடித்துநிலைத்திருக்கும் முறையிலும் அவற்றின் பங்களிப்பினைப் பெற்றுக்கொள்ள அவற்றிற்கு வலுவூட்டுவதும் இன்றியமையாததாகக் காணப்படுகிறது. பரிசீலிக்கப்படக்கூடிய அத்தகைய சீர்திருத்தங்கள் கீழே ஆராயப்படுகின்றன.

**முன்மொழியப்படும் முக்கியமான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சீர்திருத்தங்கள்**

**அ. செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் கொள்கையினை அறிமுகப்படுத்தல்**

அடிக்கடி அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் நிதியியல் நிலையேற்றுத்தன்மையை உறுதிசெய்யும் அதேவேளையில் அரசாங்கம் அதன் சமூகப் பொருளாதாரக் குறிக்கோள்களை எய்துகின்றது தொடர்பில் ஓர் நுணுக்கமான சமநிலையினை அடைய முயற்சிக்கவேண்டும். அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் வர்த்தக ரீதியில் சில வேளைகளில் வர்த்தக ரீதியில் சாத்தியமற்று இருப்பினும் அத்தியாவசியமான பணிகளையும் உற்பத்திகளையும் வழங்குவதில் ஈடுபட்டிருக்கும் போது தோன்றக்கூடும் இவ்வகையிலான சவால் எழலாம். எடுத்துக்காட்டாக, கிராமப்புற சமூகத்தினருக்கு போக்குவரத்துப் பணிகளை வழங்குவதில் அல்லது மலைப்பாங்கான பிராந்தியங்கள் போன்ற சவால்நிறைந்த பிரதேசங்களில் மின்வலுவினை வழங்குதல் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இலங்கையின் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளினால் வழங்கப்படும் பொருட்கள் மற்றும் பணிகள் 'இன்றியமையாதது' தன்மையுடன் காணப்பட்டபோதிலும் இப்பொருட்கள் மற்றும் பணிகளின் வழங்கலை நிலைத்திருக்கக்கூடிய விதத்திலும் தடங்கலின்றியும் மேற்கொள்வதனை உறுதிப்படுத்துவதற்கு செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் பொறிமுறையினை நிறுவுதல் என்பது மிகவும் முன்னுரிமை வாய்ந்ததாகும்.

கடந்த அண்மைக் காலத்தில், செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் கொள்கையினை நடைமுறைப்படுத்துவதில், குறிப்பாக, எரிபொருள் உற்பத்திகள், நீர் மற்றும் மின்வலு போன்ற பொது வசதிகள் போன்றவற்றிற்கு விலையிடுவது தொடர்பில் பெரும் இடர்ப்பாடுகளை இலங்கை எதிர்நோக்க வேண்டியிருந்தது. உலகளாவிய அபிவிருத்திகளுடன் இசைந்து செல்லும் விதத்தில் எரிபொருள் உற்பத்திகளின் விலைகள் ஓர் குறுகிய காலப்பகுதியில் அடிக்கடி சீராக்கப்பட்டபோதிலும், 2019 செத்தெம்பருக்கும் 2021 யூனுக்குமிடையிலான காலப்பகுதியில் எந்தவிதமான விலைத் திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை. இதற்குப் பின்னர் உயர்ந்துச் செல்லும் உலகளாவிய மசகெண்ணெய் விலைகளுக்கும் கடந்த பல ஆண்டுகளாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் உறப்பட்ட இழப்புக்களையும் ஈடுசெய்யும் விதத்தில் மூன்று சுற்றுக்களில் மேல் நோக்கிய விலைத் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டன. நீர் மற்றும் மின்வலுவிற்கான தீர்வைகள் முறையே 2012 மற்றும் 2014 இற்குப் பின்னர் திருத்தப்படவில்லை. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் இலங்கை மின்சார சபை போன்ற இறக்குமதி செய்யப்படும் உள்ளீடுகளில் தங்கியுள்ள தொழில்முயற்சிகளைப் பொறுத்தவரையில், உலகளாவிய பண்ட விலைகளுக்கேற்ப அவற்றின் விலைகளைக் கிரமமாகத் திருத்துவது அவசியமானது என்பதனை மீண்டும் வலியுறுத்துவது அவசியமாகும். எனவே, வெளிநாட்டு அதிர்வுகளினால் ஏற்படுகின்ற இழப்புக்கள் தொடர்பான இழப்புக்களை இத்தொழில் முயற்சிகளினால் ஈர்த்துக் கொள்ள முடியுமென எதிர்பார்க்க முடியாதாகையால் நீண்ட காலமாக விலைகளையும் தீர்வைகளையும் மாற்றாமல் இருப்பது ஏற்றுக்கொள்ள முடியாததாகும்.

இதற்கமைய, இது தொடர்பில் வெளிப்படையானதும் அரசியல் மயப்படுத்தப்படாததுமான விலையிடல் விதி மிக அவசரமான தேவைப்பாடாகும். உதவுதொகை வழங்கப்பட்ட விலைகள் குறுகிய காலத்தில் வாடிக்கையாளர்களுக்கு சில நிதியியல் வசதிகளையும் இடைவெளியையும் வழங்குகின்ற வேளையில், செலவிற்கும் குறைவான விலையில் பொருட்களை வழங்குவதுடன் தொடர்புடைய செலவின சுமை அரசாங்கத்தினால் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும். அத்தகைய விலைப் பிறழ்வுகளும் உதவுதொகை வழங்கப்பட்ட விலைகளின் காரணமாக மூலவளங்கள் தவறாக ஒதுக்கப்படுவதும் கணிசமான பேரண்ட பொருளாதாரச் செலவுகளை ஏற்படுத்தி அதன் மூலம், தற்பொழுது இடம்பெற்றுவரும் வலு மற்றும் சக்தி நெருக்கடிகளினால்

எடுத்துக்காட்டப்படுகின்றவாறு பொருளாதாரத்தில் வெல்ல முடியாத இடையூறுகளுக்கு இட்டுச்செல்வனவாகக் காணப்படுகின்றன. செலவினைப் பிரதிபலிக்கின்ற விலையிடல் பொறிமுறையானது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் குறைந்த செலவின் நன்மைகளை நுகர்வோருக்கு வெளிப்படையாகவும் சரியான நேரத்திலும் கீழ்மட்ட இலாபங்களுக்கு எவ்விதமான எதிர்க்கணியத் தாக்கங்களும் இல்லாமல் வழங்குவதனை உறுதிப்படுத்தும். அத்தகைய பொறிமுறையினால் பொருளாதாரம் முழுவதற்கும் நேர்க்கணியமாக தாக்கம் பரவிச்செல்லும் விதத்தில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வெளிப்படைத் தன்மையினையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் பெருமளவிற்கு உத்வேகப்படுத்த முடியும்.

### ஆ. உபாய நெறிப்படுத்தல்களை மேம்படுத்தல்

அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சியின் முதன்மைப் பணி குறுங்காலத்தில் வெறுமனே அரசாங்கத்திற்கான நிதியியல் வருவாயினை உருவாக்குவது மட்டுமன்றி, பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்களுக்கும் அவற்றின் உற்பத்தியாக்க உள்ளார்ந்த வளத்தினையும் ஒட்டுமொத்த நலனோம்புகைகளையும் வசதிப்படுத்தி தரமுயர்த்துவதன் மூலம் உபாயம் மிக்க பெறுமானத்தினை வழங்குவதேயாகும். இதற்கமைய, இத்தொழில்முயற்சிகள் அரசாங்கத்தின் ஒட்டுமொத்த தொலைநோக்குடன் நன்கு இணைக்கப்பட்ட வெளிப்படையானதும் தெளிவானதுமான உபாயமொன்றினைக் கொண்டிருப்பது அத்தியாவசியமாகும். இது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கான தெளிவான நோக்கத்தினையும் பணிகளையும் உறுதிப்படுத்தும்.

கடந்த அண்மைக்காலத்தில் காணப்பட்ட சான்றுகள், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் ஆர்வலர்களுக்கான பெறுமானங்களையும் தனித்துவமான வளர்ச்சியையும் உருவாக்குவதற்குப் போதுமான விதத்தில் மூலவளங்களை உயர்த்திக்கொள்ள முடியாதனவாக இருந்தமையினை எடுத்துக்காட்டின. இது, பொருளாதாரத்தில் தடைகளுக்குக் காரணமாகவுள்ள உபாயத்திட்டமிடலில் காணப்படும் பற்றாக்குறையான தன்மையினால் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. இது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் உள்நாட்டு அபிவிருத்திகளிலிருந்து மட்டுமன்றி உலகளாவிய நிகழ்வுகளிலிருந்தும் தோன்றுகின்ற வாய்ப்புக்களையும் சவால்களையும் முன்கூட்டியே அடையாளம் கண்டு கட்டுப்படுத்துவதற்கு அடிக்கடி தவறியிருப்பதற்கு காரணமாகிறது. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் மோசமான உபாயத் திட்டமிடல்களுக்கு உலகளாவிய வலு மற்றும் உணவுப் பண்டத்தின் விலைகளில் ஏற்பட்ட மோசமான தன்மை மற்றும் இத்தளம்பல்களை இறுகக்கட்டிப் போடத்தக்க உத்வேகம் நிறைந்த தாங்கிருப்புக்களும் இல்லாத தன்மையின் காரணமாக பொருளாதாரம் அனுபவிக்கின்ற வழங்கல்பக்க அதிர்வுகள் இதற்குச் சான்றாகக் காணப்படுகின்றன.

வரைபடம் சிறப்புக்குறிப்பு 7.1

**இலாபங்கள் மற்றும் இழப்புக்களின் ஒப்பீடு மற்றும் தெரிவுசெய்யப்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்காக வங்கித்தொழில் துறையிலிருந்து பெறப்பட்ட கொடுகடன்**




(அ) 31 மார்ச்சுடன் முடிவடைந்த நிதியாண்டிற்கான சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் நிதியியல் செயலாற்றம். 2021இற்கான தரவுகள் 2022 மார்ச்சுடன் முடிவடைந்த ஒன்பது மாதங்களுக்குமானது.
(ஆ) இலங்கை மத்திய வங்கியால் தொகுக்கப்படும் நாணயப் புள்ளிவிபரங்களின்படி

மூலம் : தொடர்பான நிறுவனங்கள், நிதிய அமைச்சு மற்றும் இலங்கை மத்திய வங்கி

ஆகவே, உபாய நெறிகளை மேம்படுத்துவதற்கு, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அவற்றின் தொழிற்பாடுகளை நுணுக்கமாக மதிப்பிடுவது முக்கியமானதாகும். உற்பத்திகள் அல்லது பணிகளின் முழுப் பெறுமதிச் சங்கிலியினையும் வெவ்வேறாகப் பிரித்துக்கொள்வது தொழில்முயற்சிகள் தாம் இயல்பான அனுகூலத்தினைக் கொண்டுள்ள துறைகளை மதிப்பீட்டுக் கொள்வதனை இயலுமைப்படுத்தும். ஆகவே, பிரிக்கப்பட்ட தனித்தனியான நடவடிக்கைகள் போன்றவற்றின்

மூலம் தனியார் துறை பங்கேற்புக்களுக்கு வசதியளிக்க முடியும். இதன்படி, தொழிற்பாட்டு வினைத்திறனின்மைகளை அரசாங்கத்தினாலோ அல்லது வாடிக்கையாளர்களினாலோ அல்லது தொடர்பான ஆர்வலர்களினாலோ தாங்கிகக் கொள்ளவேண்டியதில்லை.

**இ. நிதியியல் வெளிப்படைத் தன்மையினையும் பொறுப்புக்கூறும் தன்மையினையும் அதிகரித்தல்**

அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் வர்த்தக ரீதியற்ற குறிக்கோள்களை நிறைவேற்ற முயற்சிக்கின்றன வேளையில் போட்டித்தன்மை கொண்டனவாகவும் வர்த்தக ரீதியில் ஆற்றல்வாய்ந்தனவாகவும் இருக்க வேண்டிய அழுத்தத்திற்கு உட்படுவதனால், இது நிதியியல் செயலாற்றத்தை விட்டுக்கொடுக்கப்படுவதனை அவசியமாக்கலாம். அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் அவற்றின் சமூகக் கடப்பாடுகளை அவற்றின் வர்த்தக ரீதியான கடப்பாடுகளுடன் காத்திரமான விதத்தில் சமநிலைப்படுத்திக் கொள்கின்றனவா என்பதனைக் கண்டறிந்து கொள்வதற்கு பொறுப்புக்கூறும் தன்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் ஆளுகை என்பனவற்றைக் கொண்ட கோட்பாடுகளை உள்ளடக்கிய ஆற்றல்வாய்ந்த செயலாற்றக் கண்காணிப்புக் கட்டமைப்பொன்றினை உருவாக்குவது முக்கியமானதாகும்.

இது தொடர்பில், மிக அவசியமாக தேவைப்படுகின்ற முக்கிய அம்சங்களிலொன்றாக அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் பெறுபேறுகளை அளவிடுவதற்கும் மதிப்பிடுவதற்குமான முக்கிய செயலாற்றக் குறிகாட்டிகளை அடையாளம் (Key Performance Indicators) இனங்காண்பதும் அபிவிருத்தி செய்வதுமாகும். அத்தகைய முதன்மைச் செயலாற்றக் குறிகாட்டிகள் நிதியியல் பெறுபேறுகளை மதிப்பீடு செய்கின்ற அதேவேளையில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் வெறுமனே அரசாங்கத்திற்கான இலாபத்தினை உருவாக்குகின்றனவாக இருப்பதன்றி அது பரந்தளவிலான நோக்கங்களைக் கொண்டிருப்பதனால் அது சமூக, மனித மற்றும் சூழல் மூலதனங்கள் மீதான தாக்கத்தினையும் பரிசீலனையில் கொள்வது முக்கியமானதாகும்.

வலியுறுத்தப்பட வேண்டிய இன்னொரு அம்சம் யாதெனில், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் வெளிப்படுத்துகைகளையும் வெளிப்படைத்தன்மையினையும் மேம்படுத்துவதாகும். இதன்படி, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் உயர்தரங்களைப் பின்பற்ற வேண்டும் என்பதுடன் உயர்தரக் கணக்கீடு, வெளிப்படுத்துகை, இணங்குவிப்பு, பட்டியலிடப்பட்ட கம்பனிகள் என்ற ரீதியில் கணக்காய்வு நியமங்கள் என்பனவற்றிற்கு உட்பட்டனவாக இருத்தல் வேண்டும். அநேகமான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் ஆண்டு இறுதியில் நிதியியல் கூற்றுக்களை அல்லது வருடாந்த முன்னேற்ற அறிக்கைகளை உரிய நேரத்தில் தயாரிப்பதில்லை. சில சமயங்களில் ஆண்டுக் கணக்கிலும் தாமதமாவது கரிசனைகளை ஏற்படுத்துவதாகவுள்ளது. அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிலையினை மதிப்பிடுவதற்காக நிதியியல் மற்றும் நிதியல்லாத தகவல்கள் மீதான வெளிப்படுத்துகைகளுடன் சரியான நேரத்தில் காலாந்தர அறிக்கையிடல்களையும் அவர்கள் நிதியியல் ஆற்றல்வாய்ந்த தன்மையுடனும் பொருளாதார ரீதியாக நீடித்துநிலைத்திருக்கக்கூடிய விதத்தில் செயலாற்றுகின்றனவா என்பதனையும் உறுதிப்படுத்துவதற்குக் கடுமையான பொறிமுறையொன்று அவசியமானதாக இருக்கிறது.

**ஈ. கம்பனி ஆளுகையினை வலுப்படுத்துதல்**

இத்தொழில்முயற்சிகளின் வெற்றி என்பது தகுதிவாய்ந்த சபையொன்றின் வினைத்திறன் மற்றும் தொழில்சார் நிபுணத்துவ முகாமைத்துவத்தின் மீதே தங்கியுள்ளது. சபையானது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் நிருவாகத்திற்கும் செயலாற்றத்திற்கும் முழுப்பொறுப்புடன் இருப்பது அவசியமென்பதுடன் அரசின் தொழில்நோக்கத்திற்கு சாதகமான முறையில் உபாயத்தன்மையாக தொழில்முயற்சியை வழிகாட்டத்தக்க முழுத்தகுதியையும் கொண்டிருத்தல் வேண்டும். இதன்மூலம் பொருளாதார முன்னேற்றத்தினை வழிகாட்ட வேண்டும். சபை தொடர்பில் காணப்படும் வினைத்திறனின்மைகள் உபாய நெறிமுறைகளில் போதுமானதற்ற தன்மையினை ஏற்படுத்தி, இலங்கையிலுள்ள சில அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளில் காணப்பட்டவாறு அரச மூலவளங்களின் மிக்பெரிய தவறான முகாமைத்துவத்திற்கு வழியமைக்கிறது.

சபைகளின் உள்ளமைப்பு கம்பனி ஆளுகையின் தரத்தில் மிகமுக்கியமான வகிபாகமொன்றினை ஆற்றுகிறது. வலுவான பொறுப்புக்கூறும் தன்மையினை உறுதிப்படுத்துவதற்கு சபைக்கு தகுதிவாய்ந்த, அனுபவம்மிக்க, தொழில்சார் தகைமையுடைய தனிப்பட்டவர்கள் நியமிக்கப்படுவதனை அரசாங்கம் ஊக்குவித்தல் வேண்டும். நியமனங்கள் நிலையான காலப்பகுதிக்கு அடிப்படையிலானதாக தேர்தல் சுழற்சிகளிலிருந்தும் சுயாதீனமானதாக இருத்தல் வேண்டும்.இது தற்காலிகமான தீர்வுகளின் நடைமுறைப்படுத்தல்களிலும் பார்க்க, நடுத்தர காலத்தில் மாற்றங்களைச் செய்வதற்குப் பொருத்தமான நன்மைபயக்கக்கூடிய உபாயத்திட்டமிடல்களை உறுதிப்படுத்தும்.

சபைகளும் மூத்த முகாமைத்துத்தினரும் நேர்மையுடனும் சுறுசுறுப்புடனும் பணியாற்றுவதும் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட வளங்கள் இறுதியாக பொதுமக்களுடையவை என்பதனை மனதில் கொண்டும் தீவிரமான கவனத்துடன் செயற்படுவதும் மிக முக்கியமானதாகும். கம்பனி ஆளுகையின் மீது அண்மையில் நிதியமைச்சினால் விடுக்கப்பட்ட வழிகாட்டல்களும் 2021 இறுதிப்பகுதியில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்காக வெளியிடப்பட்ட தொழிற்பாட்டு கைநூலும் சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளாகவுள்ளன. அனைத்து அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளும் இவ்வழிகாட்டல்களுடன் இசைந்துசெல்லும் விதத்தில் தொழிற்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்கு நிதியமைச்சின் உத்வேகம்மிக்க கண்காணிப்பு இந்நிறுவனங்களினை மாற்றியமைக்கின்ற ஊக்கியாக விளங்கமுடியும். வழிகாட்டல்களை கிரமமாக மீளாய்வு செய்வதும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் கம்பனி ஆளுகை நியமங்களை சிறந்த பன்னாட்டு நடைமுறைகளுடன்

இசைந்துசெல்லும் விதத்தில் அணிப்படுத்துவதும் அவசியமாகும்.

அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் மேலும் செயற்றிறனாக செயற்படுவதற்கு, மூலதனத்திற்கான நுழைவினை மேம்படுத்துவதற்கு மற்றும் திறமையற்ற செயலாண்மைக்கு எதிராக பாதுகாப்பதுடன் இடர்நேர்வினையையும் மட்டுப்படுத்த நல்ல கம்பனி ஆளுகை உதவும். ஆளுகை சீரமைப்புக்களை மேற்கொண்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு பல நேரடியான நன்மைகள் உண்டு என்பதனை ஆராய்ச்சி முடிவுகள் எடுத்துக்காட்டுகிறன. தொழிற்பாட்டுச் செயலாற்றத்தின் மேம்பாடு, உள்நாட்டு மற்றும் வெளிநாடு மூலதன சந்தைகள் மூலம் மாறுபட்ட நிதியிடல் மூலங்களுக்கான அதிகரித்த நுழைவு, உட்கட்டமைப்பு அபிவிருத்திக்கான நிதியிடல், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் தாழ்ந்த இறைச் சுமை, அதிகமான பங்கிலாப கொடுப்பனவுகள் மூலம் வரவு செலவுத்திட்டத்திற்கு அதிகரித்த தேறிய பங்களிப்பு மற்றும் குறைவான ஊழல் மற்றும் மேம்பட்ட வெளிபடையானத்தன்மை என்பவை இவ்வகையிலான நன்மைகளுக்குள் உள்ளடங்கும்.

### பிராந்திய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் அனுபவம்

உலகம் முழுவதுமுள்ள நாடுகள் தங்களது அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை மாற்றியமைப்பதற்கான முயற்சிகளை பல தசாப்தங்களாக மேற்கொண்டுவருகின்றனர். இலங்கைக்கு பொருத்தமான தேர்ந்தெடுக்கப்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் சீர்திருத்த அனுபவங்கள் விவரிக்கப்பட்டுள்ளன.

#### *சிங்கப்பூர்*

சிங்கப்பூரினைப் பொறுத்தவரையில், முதலீட்டு உடமைக் கம்பனியான தெமாசெக் (Temasek) மிகுந்த வெற்றியைக் கொண்டதாகக் காணப்படுகிறது. இது 1974இல் சிங்கப்பூர் அரசாங்கத்தினால் முன்னர் வைத்திருக்கப்பட்ட சொத்துக்களையும் முதலீடுகளையும் வர்த்தக ரீதியில் முகாமைப்படுத்துவதற்காக சொந்தமாக நிறுவப்பட்டது. 1965இல் சுதந்திரம் கிடைத்ததனைத் தொடர்ந்து, இயற்கை மூலப் பொருட்களின் பற்றாக்குறை என்பது தீவிரமான கைத்தொழில் மயமாக்கல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டமொன்றினை ஆரம்பிப்பதற்கு சிங்கப்பூரைத் தூண்டியது. அரசாங்கம் பல உபாயம் மிக்க புதிய துறைகளை ஆரம்பித்தபோது அரசாங்கம் கட்டுப்பாட்டுப் பங்குகளைக் கொண்டிருந்த தொழில்முயற்சிகளின் வர்த்தக முகாமைத்துவம் தொடர்பில் அமைச்சுக்களை விடுவிப்பதற்காக தெமாசெக் நிறுவப்பட்டது. காலப்போக்கில், இந்த நிதியமானது சொத்துப்பட்டியல் கம்பனிகள் மற்றைய சந்தைகளுக்கு விரிவாக்கப்படவும் அதேபோன்று இணைப்புக்களைத் தொடர்வதற்கும் கூடியளவிற்கு பன்னாட்டு ரீதியாக போட்டித்தன்மையுடையவாக மாற்றுவதற்கு ஏற்றவிதத்தில் மற்றைய கம்பனிகளை கையேற்பதற்கும் ஊக்குவித்தது. பல சுற்றுக்களாக ஒப்பந்தத்திற்குச் செய்யப்பட்ட திருத்தங்களுக்குப் பின்னர் தற்போதைய சந்ததியினருக்கு அப்பாற்பட்டு நீடித்துநிலைத்திருக்கும் வருமானத்தினை உருவாக்குகின்ற பணியுடன் உலகளாவிய முதலீட்டுக் கம்பனியாக பரிணாமமடைவதற்கு தெமாசெக்கினை இட்டுச்சென்றது. தெமாசெக்கின் சொத்துப்பட்டியல் பெறுமதி 2021 மாச்சு இறுதியில் ஐ.அ.டொலர் 283 பில்லியனாக விளங்கியதுடன் உருவாக்கப்பட்ட குழுமத்தின் தேறிய இலாபம் அதே ஆண்டுப்பகுதியில் ஐ.அ.டொலர் 42 பில்லியனாகக் காணப்பட்டது. தெமாசெக்கின் கீழுள்ள சொத்துப்பட்டியல் கம்பனிகளின் சபைகளில் அரசாங்கத்தின் பிரதிநிதிகள் இல்லையென்பது குறிப்பிடத்தக்கது. மேலும், முக்கிய ஆளணியினரின் நியமனம் தொடர்பிலும் தெமாசெக்கின் தொழிற்பாடுகள் அல்லது மற்றைய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொடர்பிலும் எந்தவொரு செல்வாக்கினையும் சிங்கப்பூர் அரசாங்கம் கொண்டிருப்பதில்லை.

#### *சீனா*

சீனாவின் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் 1970 இலிருந்து தொடர்ச்சியாக வெளிநாட்டு வர்த்தகத்திற்கு பொருளாதாரத்தினை திறந்துவிடுவதனை நோக்கமாகக் கொண்ட சந்தை சார்ந்த பொருளாதார சீர்திருத்தங்களினால் தூண்டப்பட்டு வருகின்றன. 2003இல் அரசிற்குச் சொந்தமான சொத்துக்கள் மேற்பார்வை மற்றும் நிருவாக ஆணைக்குழுவானது (State-Owned Assets Supervision and Administration Commission, SASAC) அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளுக்கு நிதியிடுவதற்கும் ஒழுங்குமுறைப்படுத்துவதற்குமாக நிறுவப்பட்டது. 2013 இலிருந்து சீனா பாரிய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை ஒன்றினைப்பதிலும் கலப்பான சொத்துடமை நிகழ்ச்சித்திட்டங்களை விரிவுபடுத்துவதிலும் கவனத்தினைச் செலுத்தி வருகிறது. தற்பொழுது, சீனாவின் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சியை சீர்திருத்த நிகழ்ச்சிநிரல், அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை "வலுவானதாகவும், சிறந்தளவானதாகவும், பெரியதாகவும்" ('stronger, better and bigger") செய்வதன் மீது கவனத்தினைச் செலுத்துகிறது. இதன்படி, SASACஇன் zhuada fangxiao (பெரியதை பிடித்துக்கொள்ளல் சிறியதை விட்டு விடுதல்) அணுகுமுறை தனியார் மயப்படுத்தலினூடாகவும் சொத்துக்களின் விற்பனை ஊடாகவும் சிறிய அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் எண்ணிக்கையினைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கின்ற வேளையில் பொருளாதாரத்தில் உபாய ரீதியில் முக்கியமானது என கருதப்படும் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை வலுப்படுத்தவும் எதிர்பார்க்கப்படுகிறது. SASACஇன் வசமுள்ள கம்பனிகளின் ஆளுகை தனியார் துறை இணைத்தரப்பினருடன் ஒப்பிடுகையில்கூட உயர்வாகவே காணப்படுகிறது என்ற கருத்து நிலவுகிறது. முதன்மை நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் பணிப்பாளர்களும் விபரமான பங்குலாப இலக்குகளுடன் கூடிய செயலாற்றத்தினை அடிப்படையாகக் கொண்ட ஒப்பந்தத்தில் காணப்படுகின்றன. சபையும் பொறுப்புக்கூறும் தன்மையினை மேம்படுத்துவதற்காக தொழில்சார் சுயாதீனப் பணிப்பாளர்களை உள்ளடக்கியிருந்தது.

6

*பிரேசில்*

குறைந்த செயலாற்றத்தினைக் கொண்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொடர்பில் விடாப்பிடியான பிரச்சனைகள் காணப்பட்டமைக்கிடையிலும் பிரேசில், போர்ஜீன் குளோபல் 500இல் (Fortune Global 500) பட்டியற்படுத்தப்பட்ட பெட்ரோப்றஸ் (Petrobras) போன்ற மிகவும் வெற்றிகரமான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை உருவாக்கியிருக்கிறது. 2010இல் பெட்ரோப்ராஸ் முழுமையாக அரசிற்குச் சொந்தமான கம்பனியிலிருந்து கலப்புக் கம்பனியாக மாற்றமடைந்தது. நாளதுவரையில், இவ்வுருவாக்கத்தின் பயனான பங்குத்தாபனமாக்கல் மூலதனச் சந்தைகளின் வரலாற்றில் மிகப்பாரிய மூலதன அதிகரிப்பு கொடுக்கல்வாங்கல்களிலொன்றாகக் காணப்படுகிறது. இது, கம்பனியின் சந்தைப் பெறுமதியில் அதிகரிப்பொன்றினை உருவாக்கிய வேளையில், இதன் வளர்ச்சிக்கு ஆதரவளிக்கின்ற விதத்தில் முதலீடுகளைத் திரட்டுவதற்கு கம்பனிக்கான வாய்ப்புக்களை உருவாக்கியது. பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டமையும் கம்பனி ஆளுகை கணிசமானளவில் மேம்படுதவற்கு வழியமைத்ததுடன் ஏக சொந்தக்காரர் என்ற ரீதியில் அரசின் பங்கேற்பு கணிசமானளவிற்குக் கட்டுப்படுத்தப்பட்டது. இதன் மூலம் அரசியல் செல்வாக்கின் இடர்நேர்வும் சபையினதும் முகாமைத்துவத்தினதும் குறைவான கடப்பாடும் தடுக்கப்பட்டது.

*இந்தியா*

வினைத்திறனற்ற அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் தொடர்பான பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதற்காக அண்மைய ஆண்டுகளில் இந்தியா முதலீடுகளின் விற்பனை (disinvestment) உபாயத்தினைப் பின்பற்றுகிறது. முகாமைத்துவக் கட்டுப்பாட்டின் மாற்றல் உட்பட, தொழில்முயற்சிகளின் அரச பங்குடமையின் கணிசமான வீதத்தின் விற்பனையினை இது பாராதீனப்படுத்துகிறது. சீனாவிற்கு அடுத்ததாக போர்ஜீன் குளோபல் 500இல் (Fortune Global 500) அதிகளவில் பட்டியலிடப்பட்ட அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் இரண்டாவது இடத்தை இந்தியா பிடித்துள்ளது. அதன் சீர்திருத்த நிகழ்ச்சி நிரலில் அண்மையில் இடம்பெற்ற நகர்வாக எயர் இந்தியா தனியார்மயப்படுத்தப்பட்டமை காணப்படுகிறது. இதன் காரணமாக இந்திய அரசாங்கம் பங்குரிமையில் ஏறத்தாழ ஐ.அ.டொலர் 360 மில்லியனை பெற்றுக்கொண்டதுடன் தனிப்பட்ட பல்தொழில் கூட்டுக்குழுமம் நிறுவனமொன்று ஐ.அ.டொலர் 2 பில்லியன் கொண்ட படுகடனையும் பொறுப்பேற்றுக் கொண்டது. இந்திய அரச முகவர்கள் மற்றும் அரச துறை நிறுவனங்களின் மிகையான காணிகளையும் கட்டடங்களையும் உடமையில் கொள்வதற்கும் முகாமைப்படுத்தி நாணய மயப்படுத்துவதற்குமாக National Land Monetisation Corporation பெயரிலான கம்பனியொன்று நிறுவப்பட்டது. இது அரசிற்கு முழுமையாக சொந்தமான கம்பனியொன்றாக நிதியமைச்சின் கீழ் ஏற்படுத்தப்படவுள்ளது.

**இலங்கையில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சியின் வெற்றிகரமான மாற்றம்: சிறிலங்கா ரெலிகொம் பிஎல்சி பற்றிய குறிப்பு**

தரம், நம்பகத்தன்மை மற்றும் பணிகளின் விலையிடல் ஆகிய நியதிகளில் இலங்கையிலுள்ள மிக வெற்றிகரமாகவுள்ள பணிகள் துறைகளிலொன்றாக தொடர்பூட்டல் துறை விளங்குகின்றது. இன்று, இலங்கை பெருமைப்பட்டுக்கொள்ளக்கூடிய விதத்தில் 135 சதவீதத்திற்கும் மேலான செல்லிடத்தொலைபேசி நுழைவு வீதத்தினையும் இப்பிராந்தியத்திலேயே மிகக்குறைவான செல்லிட, இணையத்தளக் கட்டணங்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. இத்தொழில்துறையில் முக்கிய தொழிற்பாட்டாளராக சிறிலங்கா ரெலிக்கொம் பிஎல்சி விளங்குவதுடன் இது கடந்த இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக, மிக வெற்றிகரமான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சியாகவும் தோற்றம் பெற்றிருக்கிறது.

1980களின் தொடக்கத்தில் இடம்பெற்ற பொருளாதார தாராளமயமாக்கலைத் தொடர்ந்து, இலங்கை, தொலைத்தொடர்பூட்டல் துறையினை மீளமைப்பதற்கு தொலைத்தொடர்பூட்டல் திணைக்களத்தினை நிறுவனமயப்படுத்திய பின் இது தனது செயற்பாட்டு தொழிற்பாடுகளை பின்னர் சிறிலங்கா ரெலிக்கொம என்ற பெயரிடப்பட்ட ஓ ர் அரச கூட்டுத்தாபனத்திற்கு கையளிக்கப்பட்டது. 1996இல் சிறிலங்கா ரெலிகொம் அரசிற்கு முழுமையாகச் சொந்தமான வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனியாக மீளமைக்கப்பட்டது. இந்த அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிக்கு திருப்பு முனையாக இருந்தது யாதெனில் ஐ.அ.டொலர் 225 மில்லியனுக்காக 25 சதவீதமான மூலதனப்பங்கு நிப்போன் ரெலிகிறாப் அன்ட் ரெலிபோன் கோப்பரேசனுக்கு அடுத்துவந்த ஆண்டில் விற்கப்பட்டதாகும். இதனை அடுத்து 2003இல் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் சிறிலங்கா ரெலிகொம் பிஎல்சி வெற்றிகரமாக பட்டியலிடப்பட்டது. 2020 இறுதியில் சிறிலங்கா ரெலிகொம் பிஎல்சி இன் இரண்டு முக்கிய பங்குடமையாளர்களாக திறைசேரி செயலாளரூடாக 49.50 சதவீத பங்குடமையினைப் பெற்றுக்கொண்ட அரசாங்கமும் 44.98 சதவீதப் பங்கினைப் பெற்றுக்கொண்ட குளோபல் ரெலிகொமினிகேசன் ஹோல்டிங் என். வி உம் விளங்கியதுடன் கொழும்பு பங்குப் பரிவர்த்தனையில் பகிரங்கமாக விற்பனை செய்யப்பட்ட எஞ்சியவை மற்றைய பங்குடமையாளர்களினாலும் வைத்திருக்கப்பட்டன. இதற்கமைய, சிறிலங்கா ரெலிகொமிலிருந்தான பங்கிலாபம் 2020இல் ரூ.947 மில்லியன்களாகக் காணப்பட்டதுடன் 2022இலும் அதற்குஅப்பாலுக்குமான இத்தொகை ரூ.1.4 பில்லியனாக இருக்கும் என எதிர்பார்க்கிறது.

சிறிலங்கா ரெலிகொம்மினைப் பொறுத்தவரை, அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சியொன்றில் ஏற்கனவே இயல்பாகவே காணப்படக்கூடிய உள்ளார்ந்த வளத்தினையும் இவ்வுள்ளார்ந்த வளத்தினை பொருளாதார ரீதியில் பயன்படுத்திக்கொள்ள உதவக்கூடிய உரிமை நீக்கம் போன்ற, உரிய நேரத்திலான சீர்திருத்தங்கள் எவ்வாறு மேற்கொள்ளப்படவேண்டும் என்பதனையும் எடுத்துக்காட்டுகிறது. இவ்விடயத்தில் கவனிக்கத்தக்க

6

மற்றொரு அம்சம் சிறிலங்கா ரெலிகொம்மின் முன்னேற்றத்திற்கு வசதியளித்த, போட்டித்தன்மையினையும் எதிர்த்து நிற்கக்கூடிய தன்மையினையும் வழங்கிய ஒழுங்குமுறைப்படுத்தல் சூழலை உருக்கியதனூடாக இத்துறையில் ஒட்டுமொத்த இயக்கவாற்றல் அபிவிருத்தியையும் உறுதிப்படுத்திய சுயாதீனமான ஒழுங்குமுறைப்படுத்துநராக இலங்கை தொலைத்தொடர்பூட்டல் ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு ஏற்படுத்தப்பட்டமையாகும்.

சிறிலங்கா ரெலிகொம் தொடர்பில் காணப்பட்ட வெற்றியை கருத்திற்கொண்டு, எதிர்வரும் காலத்தில் அரசானது அதற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் விற்பனை இல்லாவிடில் அதனது சிறுபான்மை பங்குரிமைகளை விற்பதனை கருதலாம். இது தொடர்பில், தொடர்ந்துவரும் அரசாங்கங்கள் அரசச் சொத்துக்களின் விற்பனை தொடர்பில் ஓர் இசைவான மாற்றமில்லாத கொள்கை நிலைப்பாட்டினை பேணுவது அவசியமான அதே வேளையில் இவ்வகையிலான வழிமுறைகளில் ஆர்வலர்களின் கரிசனைகளை ஓர் நேரகாலமான மற்றும் முன்மதியான முறையில் தீர்க்கவேண்டும்

## முன்னோக்கிய நோக்கு

முன்னோக்கிச் செல்கையில், கொவிட்-19 இற்குப் பின்னரான மீட்புப்பயணத்தில் இலங்கையின் முன்னேற்றமும் உயர் நடுத்தர வருமான அந்தஸ்திற்கு மாறியுள்ளமையும் கவனத்திற்கொள்கையில் அரசாங்கம் தற்பொழுது நடைபெற்றுவருகின்ற சீர்திருத்தங்கள், குறிப்பாக இணைப்புக்கள் ஒன்று சேர்த்தல்கள் தொடர்பானவற்றை விரைவான முறையில் நடைமுறைக்கிடுவதும், மேற்குறிப்பிட்டவற்றை முன்மொழிந்திருக்கின்ற கம்பனி ஆளுகையினை வலுப்படுத்துவதும் மிக முக்கியமானவையாகும். வெளிப்படையான விலையிடல் பொறிமுறையினை நடைமுறைப்படுத்தல், உபாயநெறிமுறைகளை மேம்படுத்தல் மற்றும் நிதியியல் பொறுப்புக்கூறும் தன்மையினை அதிகரித்தல் என்பனவற்றுடன் தொடர்பான சீர்திருத்தங்கள் குறுங்காலத்தில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளின் செயலாற்றத்திற்கு தவிர்க்கமுடியாதவையாகும். இவை மேம்பட்ட அரசிறையினை உறுதிப்படுத்துவது மட்டுமன்றி வரவுசெலவுத் திட்ட மாற்றல்கள் அல்லது வங்கித்தொழில் முறைமையினூடாக கடன்பாடுகள் ஊடாக நிதியிடும் தேவையினையும் குறைத்துவிடுகின்றன. இது, வீட்டுடமையாளர்கள் மற்றும் தொழில்முயற்சிகளின் உற்பத்தியாக்கம் மிக்க வருமான உருவாக்கங்களுக்கு அல்லது சொத்து உருவாக்கத்திற்கும் வழிப்படுத்தப்படக்கூடிய கணிசமானளவு மூலவளங்களை விடுவிக்க உதவும். இதற்கமைய, குறுங்காலத்தில் அரச அரசிறையில் பல்பெருக்கத் தாக்கமொன்றும் நடுத்தரத்திலிருந்து நீண்டகாலப்பகுதியில் வளர்ச்சியொன்றும் காணப்படும்.

பொருளாதார அபிவிருத்திச் செய்முறையில் அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகள் ஆற்றும் முக்கிய வகிபாகத்தினை, குறிப்பாக, உபாயத்துறைகளில் அவற்றின் பரந்த அடிப்படையிலான பிரசன்னத்தினைப் பரிசீலனையில் கொள்கையில் இத்தொழில்முயற்சிகள் அரசிற்கு நிதியியல் சுமையினை ஏற்படுத்தாமல் காத்திரமான முறையில் செயலாற்றி சாதகமான சமூகப் பொருளாதார பெறுபேறுகளை வழங்குவது மிக முக்கியமானதாகும். இது தொடர்பில், அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகள் தொடர்பில் தனிப்பட்ட சாத்திய ஆய்வுகளை மேற்கொண்டு அவற்றின் சில சொத்துக்களை உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்பது தொடர்பில் நேரகாலத்திற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும். இதற்குப் பின்னர், அரசு இந்த அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை இவையை அரசியல்மயப்படுத்தாமல் நிலைத்திருக்கக்கூடிய மற்றும் சாத்தியமான தொழிற்பாடுகளை உறுதிசெய்யும் வகையில் மீளுபாயப்படுத்தலாம். அத்தகைய சீர்திருத்தங்கள், ஆரம்பத்தில் அரசாங்கத்தின் கொள்கை முன்னெடுப்புக்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தக்கூடுமெனினும் அது நடுத்தர காலத்திலிருந்து நீண்டகாலம் வரையான காலப்பகுதியில் நிதியியல் ரீதியில் ஆற்றல்வாய்ந்ததும் பொருளாதார ரீதியில் நன்மை பயப்பதுமான அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை உருவாக்குவதற்கான பாதையினை இடும். அத்தகைய சீர்திருத்தங்களூடாக தற்போதுள்ள அரசிற்குச் சொந்தமான தொழில்முயற்சிகளை “நிதியியல் சுமையிலிருந்து” “பெறுமதி உருவாக்குநர்” ஆக மாற்றியமைப்பது தடைக்கல்லாக இருப்பதிலும் பார்க்க உயர் வளர்ச்சி உத்வேத்திற்கு இலங்கையை முன்னேற்றுகின்ற வசதிப்படுத்துநர்களாக இவை தோற்றம் பெறுவதற்கு மிக இன்றியமையாததாகும்.


**உசாத்துணைகள்**

1. Central Bank of Sri Lanka. A Review of the Economy of Sri Lanka, 1950 – 1975
2. Central Bank of Sri Lanka. 1998. Economic Progress of Independent Sri Lanka.
3. Central Bank of Sri Lanka. Annual Reports, Various Issues.
4. European Commission. 2013. European System of Accounts 2010 (ESA10), Section 2.51, Luxembourg.
5. IMF. 2014. Government Finance Statistics Manual 2014. Washington, DC: International Monetary Fund.
6. IMF. 2020. 'State-Owned Enterprises: The Other Government.' IMF Fiscal Monitor, April 2020.
7. Guluzade, A., 2020, May. How reform has made China's state-owned enterprises stronger. In World Economic Forum, May (Vol. 21).
8. Kim, K. and Panchanatham, N., 2021. Reform and privatization of state-owned enterprises in India. In Reforming State-Owned Enterprises in Asia (pp. 157-168). Springer, Singapore.
9. Knight, M., Guruge, A. and Cham, M.R., 2017. State-owned enterprise reforms in Sri Lanka: the way forward. Manila: Asian Development Bank Institute.
10. Lakshman, W.D. ed., 1997. Dilemmas of development: fifty years of economic change in Sri Lanka. Sri Lanka Association of Economists.
11. Ministry of Finance. Annual Report, Various Issues.
12. Mukherjee, A., Sarma, A.P., Barah, A. and Mohan, A., 2020. Public Sector Enterprises in India: Enhancing Geo-Strategic Reach and Exports.
13. OECD. 2015. OECD Guidelines on Corporate Governance of State-Owned Enterprises, 2015 Edition. Paris: OECD Publishing.
14. PwC. State-Owned Enterprises: Catalysts for public value creation?
15. World Bank Group. 2014. Corporate Governance of State-Owned Enterprises: A tool kit.